**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 51/2021 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | மாரியப்பன் | CASTE | : | |
| S/O | பெரியகருப்பன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | கோவில் தென்கரை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 72 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2025**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது தகப்பனார் பெரியகருப்பன் 1991ம் ஆண்டு இறந்தார். எனது அப்பா இறக்கும்முன் எந்த சொத்தையும் எனது பெயருக்கு பத்திரம் எழுதித்தரவில்லை. எங்கள் குடும்பத்தினருக்கு 2017ம் ஆண்டு வாய்க்கரால் பாகப்பிரிவினை செய்துகொண்டோம். எனது அப்பா இறந்தபின் சொத்தின் பத்திரங்கள் வங்கியில் அடமானத்திற்கு வைக்கப்பட்டிருந்ததால் தாமதமாக 2017ல் பாகப்பிரிவினை செய்தோம். 2006ல் வழக்குச்சொத்தை கிரையம் பெற்றபின் அதை அளந்து பார்க்கவில்லை. 2017 ல் பாகப்பிரிவினை செய்தபோது வழக்குச்சொத்தை அளந்து பார்க்கவில்லை.

2. வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி எனது தம்பி ராமலிங்கம் அவருக்கு பாகமாக கிடைத்த சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும் அந்த பத்திரத்தில் நாங்களும் கையெழுத்து செய்துள்ளோம் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி எனது பாகத்தில் கிடைத்த சொத்தை எனது மகனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் எனது தகப்பனார் பெரியகருப்பன் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்துவந்தோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பத்திரத்திலும் மேற்படி வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.8 ஆவணத்தில் பழைய பட்டாவான 680 என்பது 9 ஆக மாறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் இருந்த பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணம் சொத்து இருந்தது என்றால் எனது அப்பா பெயரில் பட்டா இல்லை. எனது பத்திரங்களிலும் வா.சா.ஆ.8 ஆவணத்திலும் எனது அப்பா பெயரில் பட்டா இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தின்படி வழக்குச்சொத்திற்கு மேற்குப்புரம் உள்ள பிரதிவாதிகளின் சொத்து என்ன விஸ்தீரணம் என்று எனக்குத்தெரியாது.

4. 2017 ல் பாகப்பிரிவினையின்படி ஒரு நபருக்கு எவ்வளவு பங்கு சொத்து கிடைத்தது என்றால் 550 சதுரடி ஒதுக்கப்பட்டது. 2017 ம் ஆண்டு ஓய்வுபெற்ற VAO வைத்து அளந்தேன். அந்த VAO எனது உறவினர். வழக்குச்சொத்தை அளந்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.8 மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2017 க்கு முன் பிரதிவாதிகள் இடத்தை சர்வேயர் அளந்தாரா என்று எனக்குத்தெரியாது. 14.08.2019 தேதியிட்ட சர்வேயர் பிரதிவாதிகளின் இடத்தை அளப்பதற்கான அறிவிப்பை நான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தெரியாமல் கையெழுத்து செய்துவிட்டேன்.

5. 2019 ம் ஆண்டு சொத்துக்கள் அளக்கப்பட்டு எனது சொத்தை நான்குமாலுடன் காட்டப்பட்டது என்றாலும் அதை நான் வழக்கிற்காக பொய்யாக மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வேயர் அறிவிப்பில் பின்பக்கம் 4 வதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது சொத்திற்கு மேற்குப்புரம் ஒரு கிணறும், தனலெட்சுமி அம்மாள் இடத்திற்கு கிழக்குப்புறம் ஒரு கிணறு இருந்தது என்றால் சரிதான். எனது சொத்திற்கு மேற்குப்புரம் உள்ள கிணறு மூடப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த கிணறு இருந்த சுவடு தற்போது தெரியாது என்றால் சரியல்ல.

6. எனது பத்திரங்களிலும் எனது குடும்பத்தினர் பத்திரங்களிலும் மேற்படி கிணறு இருந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. எனது சகோதரிகள் 2 பேர் அதில் விழுந்து இறந்ததால் அந்த கிணறு மூடப்பட்டது என்றால் சரிதான். எனது தம்பியையும் வினோத்தையும் விசாரிக்க தயாராக உள்ளேன். எனது பாட்டி ராக்கம்மாள் காலத்தில் அவரது தம்பி ராமச்சேர்வை வழக்குச்சொத்தை சரிபாதியாக பிரித்து அனுபவம் செய்து பின்பு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 புகைப்படங்களில் உள்ள வீட்டின் கிழக்குப்புரம் உள்ள வீட்டை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். ஆதியில் வழக்குச்சொத்து கிழமேல் 22 அடியாக இருந்து 2 ஆக பிரிக்கப்பட்டு இடையே பொதுச்சுவர் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

7. மேற்சொன்னபடி பிரிக்கப்பட்ட சொத்திற்குதான் எனது அப்பா பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றாலும் ஆனால் நாங்கள் மேற்குப்புரம் உள்ள இடத்தை தவறாக உரிமை கோருகிறோம் என்றாலும் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தம்பியின் பத்திரத்தில் நான்குமால் தவறாக உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை தற்போதுவரை நாங்கள் அளந்துபார்க்கவில்லை. 2017 ல் VAO வைத்து அளந்தபோது அடி அளவு குறைந்தது தெரியவில்லை என்றாலும் 2021 ல் தான் தெரியவந்தது என்றாலும் சரிதான்.

8. வழக்குச்சம்பந்தமாக சரியான விவரங்கள் தெரியாமல் நான் சொல்லும் சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. யூடிஆர்–க்கு பின்புதான் வழக்குச்சொத்து தவறாக உள்ளதாக வழக்குத்தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். யூடிஆர் –க்கு முன்பு உள்ள ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. யூடிஆர் தவறாக செய்யப்பட்டுள்ளது என்று வருவாய் துறை நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யவில்லை. யூடிஆர் தவறாக இருந்தால் அதை சரிசெய்ய மாவட்ட வருவாய் அலுவலரிடமும், கோட்டாட்சியரிடமும்தான் மனு செய்யவேண்டும் என்றாலும் நான் தவறாக நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

2. நத்தம் நிலவுடைமை துாய சிட்டாவின்படி வழக்குச்சொத்தான சர்வே எண் 9/2 ராமலிங்கம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்கள் தற்போது வரை பெரியகருப்பன் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கேட்காமல் அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.